DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.72/2022**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : நாகூர்கனி
Father/ Husband Name : பக்கீர்முகமது
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 25.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கண்ணன்கோட்டையில் குடியிருந்து பூக்கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கடந்த 19.06.2021-ம் தேதி மாலை 06.00 மணியளவில் இராமேஸ்வரம் பைபாஸ் கண்ணன்கோட்டையில் நான் வேலை முடிந்து திரும்ப வரும் போது கூட்டமாக இருந்தது. நான் போய் பார்த்தேன். அப்போது எதிரி மற்றும் அ.சா.1,2 இடம் சம்பந்தமாக சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிரியின் மகன் காரில் வந்து எதிரியிடம் என்னப்பா சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் வெட்டுங்கள் என்று சொன்னவுடன் எதிரி அரிவாளால் அ.சா.1யை பின்தலையில் வெட்டினார். அப்போது எதிரியின் மகன் கறுக்குமட்டையை எடுத்து அ.சா.2யை முதுகிலும், விலாஎலும்பிலும் அடித்தார். பிறகு தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அ.சா.1யை அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1,2வும் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள். நாங்கள் ஒரே சமுகத்தை சேர்ந்தவர்கள். நான் ராம்நகரில் உள்ள என் பூக்கடையிலிருந்து என் வீட்டிற்கு போய்க் கொண்டிருந்தேன். நான் ராம்நகரிலிருந்து சைக்கிளில் பெரியவர் ஒருவரை ராமநாதன் மளிகைகடையில் இறக்கிவிட்டுவிட்டு குறுக்கு

பாதை வழியாக வீட்டிற்கு சென்றேன். நான் மெயின் ரோடு வழியாக ராம்நகரிலிருந்து எளிதாக என் வீட்டிற்கு சென்றுவிடலாம் என்றால் ஒருவரை இறக்கிவிட வேண்டியிருந்ததால் அந்த வழியாக சென்றேன், எப்போதும் அந்த வழியாக செல்வது இல்லை. பிரச்சனை நடந்த இடத்தை வேலி அமைத்து எதிரி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது கூட்டமாக இருந்தது. நான் சம்பவம் இடத்திற்கு போகும் போது சண்டை நடந்து முடிந்துவிட்டது என்றால் சரியல்ல, நான் சென்ற பிறகு தான் சண்டையே ஆரம்பித்தது, அதுவரை பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். சண்டை எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சுமார் 1/2 மணிநேரம் நடந்தது. பிரச்சனை நடந்த இடத்தை சுத்தம் செய்ய வேலை ஆட்கள் நின்றிருந்தார்களா என்றால் தெரியாது, நான் அதை கவனிக்கவில்லை.

3. சண்டை முடிந்து மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அ.சா.1,2 என் உறவினர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியோ, எதிரியின் மகனோ யாரையும் தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.